# தெரிந்துகொள்ள வேண்டியவை

நீங்கள் ஜூரா மாகாணத்திற்கு வந்தவுடன்
கடை திறந்திருக்கும் நேரம் பொது விடுமுறை நாட்கள்
குடியிருப்பு அனுமதி
பொறுப்பு காப்பீடு
போதைப்பொருள், மது மற்றும் புகையிலை
செல்லப்பிராணிகள்
சுவிட்சர்லாந்தின் எழுதப்படாத சட்டங்கள் மற்றும் தனித்தன்மைகள்

# நீங்கள் ஜூரா மாகாணத்திற்கு வந்தவுடன்

இந்த அத்தியாயத்தில் நீங்கள் வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளைப்பற்றிய கீழ்கண்ட முக்கியத் தகவல்களைக் காண்பீர்கள், எ.கா.: நீங்கள் ஜூராவிற்கு வரும்போது என்ன செய்ய வேண்டும்?கடைகள் திறந்திருக்கும் நேரம் மற்றும் பொது விடுமுறை நாட்கள்குடியிருப்பு அனுமதிமூன்றாம் தரப்பினர் பொறுப்பு காப்பீடுபோதைப்பொருள், மது மற்றும் புகையிலைசெல்லப்பிராணிகள்சுவிட்சர்லாந்தின் சட்டங்கள் மற்றும் தனித்தன்மைகள்

## நீங்கள் ஜூராவிற்கு வரும்போது என்ன செய்ய வேண்டும்?

உங்கள் நகராட்சியில் உள்ள குடியிருப்பாளர்களின் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யுங்கள்
குடியிருப்பு அனுமதிக்கு விண்ணப்பிக்கவும்
உங்கள் பிள்ளைகள் 16 வயதுக்குட்பட்டவர்களாக இருந்தால் பள்ளி இல் பதிவு செய்யவும்
ஒரு சுகாதார காப்பீட்டு நிறுவனத்துடன்ஒப்பந்தத்தில் கையெழுத்திடுங்கள்
ஒரு வேலை அனுமதி க்கு விண்ணப்பிக்கவும்

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/bon-a-savoir/a-votre-arrivee-dans-le-canton-du-jura

# கடை திறந்திருக்கும் நேரம் பொது விடுமுறை நாட்கள்

சுவிட்சர்லாந்தில் ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்களில் பெரும்பாலான கடைகள் மூடப்படும். ரயில் நிலையங்கள் மற்றும் எரிவாயு நிலையங்களில் உள்ள கடைகளுக்கு.விதிவிலக்குகள் உண்டு. மாகாணத்தைப் பொறுத்து விடுமுறைகள் மாறுபடும்.

## பொது விடுமுறை நாட்கள்

பொது விடுமுறைகள் ஞாயிற்றுக் கிழமைக்கு சமம். ஜூரா மாகாணத்தில், பின்வரும் நாட்கள் பொது விடுமுறை நாட்களாகக் கருதப்படுகின்றன:

- ஜனவரி 1: புத்தாண்டு
- ஜனவரி 2: புத்தாண்டு தினத்திற்கு அடுத்த நாள்
- புனித வெள்ளி (ஈஸ்டர் தினத்திற்கு முன் வரும் வெள்ளி)
- ஈஸ்டர் திங்கள் (ஈஸ்டர் தினத்திற்குப் பின் வரும் திங்கள்)
- மே 1: தொழிலாளர் தினம்
- பரலோகம் சென்ற வியாழன் (ஈஸ்டர் ஞாயிறு கழித்து 40 நாட்கள் பிறகு)
- பெந்தெகொஸ்தே திங்கள் (ஈஸ்டர் ஞாயிறு கழித்து 50 நாட்களுக்குப் பிறகு)
- கிறித்துவின் திருஉடல் விழா (ஈஸ்டர் ஞாயிறு கழித்து 60 நாட்களுக்குப் பிறகு)
- ஜூன் 23: ஜுரா மக்கள் ஜூன் 23, 1974 ஜூரா மாகாணத்தை நிறுவுவதற்கு வாக்களித்ததின் நினைவு நாள் (ஜூரா-பொது வாக்கெடுப்பு)
- ஆகஸ்ட் 1: சுவிஸ் தேசிய விடுமுறை நாள்
- ஆகஸ்ட் 15: மரியா பரலோகத்திற்குச் சென்ற நாள்
- நவம்பர் 1: அனைத்து புனிதர்கள் தினம்
- டிசம்பர் 25: கிறிஸ்துமஸ்

பொரென்ட்ரூயி (Porrentruy) மாவட்டத்தில், சாங் மார்ட்டான் திங்கள் (நவம்பர் 1க்குப் பிறகு 2வது அல்லது 3வது திங்கட்கிழமை) கூட ஒரு விடுமுறை நாள்.

## கடைகள் திறந்திருக்கும் நேரம்

மாகாணங்கள் கடை திறந்திருக்கும் நேரத்தை ஒழுங்குபடுத்துகின்றன.
ஜூரா மாகாணத்தில் கடைகள் திங்கள் முதல் வெள்ளி வரை திறந்திருக்கும் காலை 8 மணி முதல் மாலை 6:30 மணி வரை மற்றும் சனிக்கிழமைகளில் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும்.
சில கடைகள் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் இரவு 9 மணி வரை திறந்திருக்கும்.
ரயில் மற்றும் எரிபொருள் நிலையங்களில் உள்ள கடைகள் பெரும்பாலும் வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.
கிராமத்திலுள்ள சில கடைகள் ஞாயிற்றுக்கிழமை காலையிலும் திறந்திருக்கும்.

## பொது சேவைகள் திறந்திருக்கும் நேரம்

மாகாண நிர்வாகம் பொதுவாக திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8 மணி முதல் 11:30 மணி வரை மற்றும் மதியம் 2 மணி முதல் மாலை 4:30 மணி வரை திறந்திருக்கும். நகராட்சி நிர்வாகங்கள் (எ.கா. நகராட்சி அலுவலகம்) திறந்திருக்கும் நேரம் மாறுபடலாம். முன்கூட்டியே விசாரிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

## மெய்நிகர் கவுண்டர்கள்

பெரும்பாலான மாகாண மற்றும் நகராட்சி அலுவலகங்கள் 24 மணி நேரமும் வாரத்தின் ஏழு நாட்களும் ஆன்லைனில் கிடைக்கின்றன. பல சேவைகளை இணையம் வழியாக அணுகலாம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/bon-a-savoir/les-horaires-douverture-des-magasins-et-les-jours-feries

# குடியிருப்பு அனுமதி

சுவிட்சர்லாந்தில் வசிக்க அல்லது வேலை செய்ய விரும்பும் எவருக்கும் குடியிருப்பு அனுமதி தேவை. பல்வேறு வகையான அனுமதிகள் உள்ளன. இது வெளிநாட்டவரின் அடையாள அட்டை என்றும் அழைக்கப்படுகிறது

## பல்வேறு வகையான அனுமதிகள்

சுவிட்சர்லாந்தில் 3 மாதங்களுக்கும் மேலாக தங்கியிருக்கும் அல்லது பணிபுரியும் எவருக்கும் அனுமதி தேவை.
ஐரோப்பிய ஒன்றியம் (EU) அல்லது EFTA நாடுகளின் குடிமக்களுக்கும் மற்றும் EU மற்றும் EFTA க்கு வெளியே உள்ள பிற நாடுகளின் குடிமக்களுக்கும் விதிமுறைகள் வேறுபடும்.
இந்த அனுமதியை ஜூரா மாகாணத்தின் மக்கள் தொகை அலுவலகம் (Service de la Population) வழங்குகிறது. கீழேயுள்ள அட்டவணை பல்வேறு வகையான அனுமதிகளை பற்றி சுருக்கமாகக் கூறுகிறது.

## புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு:

ஒரு புகலிட ற்குவிண்ணப்பிக்க சுவிட்சர்லாந்திற்கு வருபவர்களுக்கு வேறு வகையான அடையாள அட்டைகள் உள்ளன.

## வெளிநாட்டவரின் அடையாள அட்டை

சுவிட்சர்லாந்தில் வசிக்கும் வெளிநாட்டினர் அடையாள அட்டை பெறுகிறார்கள். அடையாள அட்டையின் வகை நபருக்கு நபர் மாறுபடும் மற்றும் பல்வேறு விதிகளைப் பொறுத்தது (எ.கா. பிறந்த நாடு).
அனைத்து அடையாள அட்டைகளும் பயோமெட்ரிக் அட்டைகளாக வழங்கப்படுகின்றன.
தங்கள் அடையாள அட்டையை பெறுவதற்கு, தெலமோந்த்தில் உள்ள பாஸ்போர்ட் அலுவலகத்திற்குச் சென்று அவர்களின் பயோமெட்ரிக் தரவுகளை (டிஜிட்டல் கைரேகைகள் மற்றும் படம்) பதிவு செய்ய வேண்டும்.
அடையாள அட்டை திருடப்பட்டாலோ அல்லது தொலைந்து போனாலோ, உடனடியாக காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

## குடியிருப்பு அனுமதி நீட்டிப்பு/புதுப்பித்தல்

உங்களின் அந்தஸ்து மற்றும் தேசியத்தைப் பொறுத்து உங்கள் அனுமதி படிப்படியாக புதுப்பிக்கப்படும். நீங்கள் ஒரு படிவத்தைப் பெறுவீர்கள். நீங்கள் இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்து, காலக்கெடு முடிவடைவதற்குள் திருப்பித் தர வேண்டும். நீட்டிப்பு தானாக கிடைக்காது. இது நிபந்தனைகளுக்கு உட்பட்டது. உதாரணமாக: பிரெஞ்சு மொழியைக் கற்றுக்கொள்வது.
சில நேரங்களில் புதுப்பிக்க கோரும் விண்ணப்பம் மறுக்கப்படுகிறது. உதாரணமாக,

- நபர் குற்றம் செய்தால்;
- நபர் நீண்ட காலத்திற்கு சமூக உதவியைப் பெற்றுக்கொண்டிருந்தால்.

மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/bon-a-savoir/les-autorisations-ou-permis-de-sejour

# பொறுப்பு காப்பீடு

ஒவ்வொரு வயது வந்தவரும் பொறுப்புக் காப்பீடு எடுக்க வேண்டும். நீங்கள் தற்செயலாக ஒருவருக்கு காயம் ஏற்படுத்தினால் அதற்கான செலவுகளை காப்பீடு ஈடு செய்யும்.

## தனிப்பட்ட பொறுப்பு

நீங்கள் உள்நோக்கமின்றி மற்றொரு நபரை காயப்படுத்தினால் அல்லது அவரது சொத்துக்களை சேதப்படுத்தினால், நீங்கள் பண செலவுகளுக்காகபொறுப்பாவீர்கள். உதாரணமாக, நீங்கள் விளையாட்டு நிகழ்வுகளின்போது ஒருவரை காயப்படுத்தினால், பண செலவுகள் மிக அதிகமாக இருக்கும். உங்களிடம் காப்பீடு இல்லையென்றால், நீங்களே பணம் செலுத்த வேண்டும்.

## பொறுப்பு காப்பீடு

சேதம் ஏற்பட்டால், பொறுப்பு காப்பீடு வைத்திருத்தல் முக்கியம். அவ்வாறு செலவுகளில் பெரும்பகுதியை காப்பீடானது ஈடு செய்கிறது. பெரும்பாலான தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் இந்த காப்பீட்டை வழங்குகின்றன. ஒரே வீட்டில் வசிக்கும் அனைவருக்கும் இது பயன்படத்தக்கதாக இருக்கும். பொறுப்புக் காப்பீடு கட்டாயமில்லை என்றாலும், அது உறுதியாகப் பரிந்துரைக்கப்படுகிறது.

## காப்பீடு எவற்றை உள்ளடக்குகிறது ?

இந்த காப்பீடு மற்ற நபர்களுக்கு ஏற்படும் சொத்து சேதம் (உடமைகளுக்கு) மற்றும் தனிப்பட்ட காயம் (மக்களுக்கு) ஆகியவற்றை உள்ளடக்குகிறது.
பழுதுபார்ப்பு செலவுகள், மருத்துவ செலவுகள், இழந்த ஊதியத்திற்கான இழப்பீடு அல்லது வலி மற்றும் துன்பத்திற்கான இழப்பீடு ஆகியவை இதில் அடங்கும். இது செல்லப்பிராணிகளுக்கு ஏற்படும் சேதத்திற்கான செலவுகளையும் மேற்கொள்ள முடியும். இருப்பினும், ஒரே வீட்டில் வசிக்கும் மக்களுக்கு சேதம் ஏற்பட்டால் இப்பணம் செலுத்தப்படாது. வேண்டுமென்றே அல்லது மொத்த அலட்சியத்தால் ஏற்படும் சேதத்திற்கு காப்பீடு பணம் கொடுக்காது.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/bon-a-savoir/lassurance-responsabilite-civile

# போதைப்பொருள், மது மற்றும் புகையிலை

போதைப்பொருள், மது மற்றும் புகையிலைப் பொருள் குறித்த சட்டங்களை கண்டிப்பாக கடைபிடிக்கப்பட வேண்டும். கீழ்க் கண்டவற்றை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்:

## போதைப் பொருள்

போதைப்பொருள் சட்டத்தின்படி, போதைப் பொருட்களை வைத்திருப்பது, விற்பனை செய்வது மற்றும் உட்கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இது சிறிய அளவுகளுக்கும் பொருந்தும்.
போதைப்பொருளை வணிக ரீதியாக விற்பனை செய்தால் அதிக அபராதம் விதிக்கப்படும்.

## மது மற்றும் புகையிலை

மது மற்றும் புகையிலை விற்பனைக்கு வயது வரம்புகள் உள்ளன. ஜூரா மாகாணத்தில்

- 16 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு மதுபானங்களை விற்கக்கூடாது;
- புகையிலை பொருட்கள் மற்றும் மதுபானங்களை 18 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு விற்கக்கூடாது.

## புகைபிடித்தல் மீதான தடை

புகைபிடித்தல் தடைகள் வலுவாக ஒழுங்குமுறைபடுத்தப்பட்டுள்ளன.
இந்த விதிமுறைகள் அனைவரின் ஆரோக்கியத்தையும் பாதுகாக்க உதவுகின்றன.
புகைபிடித்தலுக்கு பின்வரும் சூழ்நிலைகளில் தடை செய்யப்படுகிறது

- மூடப்பட்ட, பொதுவில் அணுகக்கூடிய இடங்கள் (மருத்துவமனைகள், அரசு அலுவலகங்கள், பள்ளிகள், அருங்காட்சியகங்கள், திரையரங்குகள், அரங்குகள், ரயில்கள் மற்றும் பேருந்துகள், கடைகள் மற்றும் ஷாப்பிங் மையங்கள்);
- அதிகளவு நபர்கள் வேலை செய்யும் அறைகள்.

உணவகங்களில் புகைபிடிப்பது அனுமதிக்கப்படுமா என்பது உணவகம் எவ்வளவு பெரியது என்பதைப் பொறுத்தது. பல உணவகங்களில் சிறப்பு புகைபிடிக்கும் அறைகள் உள்ளன. அவை ஃபுமுவார் என்று அழைக்கப்படுகின்றன.
சிலர் புகைபிடிப்பதை நிறுத்துவது அல்லது போதைப்பொருள் பயன்படுத்துவதை நிறுத்துவது கடினம்.
சிலர் புகைபிடிப்பதை நிறுத்துவது அல்லது போதைப்பொருள் பயன்படுத்துவதை நிறுத்துவது கடினம்.
இவர்கள் அடிமையானவர்கள் (புகையிலை, போதைப்பொருள் போன்றவை). உதவி சலுகைகள் மற்றும் அடிமையாதல் தடுப்பு கோரல் குறித்த தகவல் களை உதாரணத்திற்குஉதவி சேவைகள் மற்றும் துணை நிறுவனங்களில் உங்களுக்கு கிடைக்கும்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/bon-a-savoir/les-drogues-lalcool-et-le-tabac

# செல்லப்பிராணிகள்

விலங்குகளை வளர்க்கும் யாவரும் பல்வேறு விதிகளை கடைபிடிக்க வேண்டும். சில விலங்கு இனங்கள் குடியிருப்பில் வைக்க அனுமதிக்கப்படாது. நாய் உரிமையாளர்கள் நாய்க்கான வரி செலுத்த வேண்டும்.

## செல்லப்பிராணிகளை வைத்திருத்தல்

கினிப் பன்றிகள், வெள்ளெலிகள், கேனரிகள் அல்லது மீன் போன்ற சிறிய செல்லப்பிராணிகளை வைத்திருக்க வாடகை குடியிருப்பில் வசிக்கிறவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.
இருப்பினும், வாடகை ஒப்பந்தத்தில் பூனைகள் அல்லது நாய்கள் போன்ற பெரிய விலங்குகளை வைத்திருப்பதை வீட்டு உரிமையாளர்கள் தடை செய்யலாம். அவர்கள் சத்தம் போடுகிற அல்லது ஆபத்தான விலங்குகளை தடை செய்யலாம். செல்லப்பிராணியை வளர்ப்பதற்கு முன், உங்கள் வீட்டு உரிமையாளரிடம் அனுமதி பெற வேண்டும்.
கூடுதலாக, விலங்கு உரிமையாளர்கள் கூட்டாட்சி விலங்கு பாதுகாப்பு சட்டங்களுக்கு இணங்க வேண்டும். உதாரணமாக, சில விலங்கு இனங்களை தனியாக வைக்கக்கூடாது (எ.கா. முயல்கள்) அல்லது சிலவற்றை பெரிய கூண்டுகளில் மட்டும் தான் வைக்க அனுமதிக்கப்படும்.
பல (அயற்பண்புடைய) விலங்குகள் சுவிட்சர்லாந்திற்கு இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படாது.
மற்றவற்றிற்கு, நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் கால்நடை அலுவலகத்தின் சிறப்பு அனுமதி (Service de la consommation et des Affairs vétérinaires - SCAV) தேவை.

## நாய்கள்

ஜூரா மாகாணத்தில் நாய்களுக்கான சிறப்பு விதிகள் உள்ளன:
அனைத்து நாய்களும் தோலின் கீழ் மைக்ரோசிப் மூலம் குறிக்கப்பட வேண்டும். அவை பதிவு செய்யபட வேண்டும். உரிமையாளர் நாய்க்கான அடையாள அட்டையைப் பெறுவார்.
நினைவில் கொள்க: இந்த கார்டு வெளிநாட்டு பயணத்திற்கு தேவையான செல்லப்பிராணி பாஸ்போர்ட்டிற்கு ஒத்ததாக இருக்காது.
நீங்கள் வசிக்கும் நகராட்சியில் நாய்கள் பதிவு செய்யப்பட வேண்டும். ஆண்டுதோறும் நாய்க்கான வரி செலுத்த வேண்டும்.
அனைத்து நாய் உரிமையாளர்களும் தங்கள் நாயின் மலத்தை எடுத்து அப்புறப்படுத்த வேண்டும். இல்லையெனில் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படலாம்.
நாய்களுக்கான பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ள பரிந்துரைக்கப்படுகிறது.
பிட்புல்ஸ் அல்லது ரோட்வைலர் போன்ற சில நாய் இனங்களுக்கு, சிறப்பு அனுமதி தேவை.
உங்கள் கால்நடை மருத்துவரிடம் இருந்து கூடுதல் தகவல்களைப் பெறலாம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/bon-a-savoir/les-animaux-domestiques

# சுவிட்சர்லாந்தின் எழுதப்படாத சட்டங்கள் மற்றும் தனித்தன்மைகள்

ஒவ்வொரு நாட்டிற்கும் அதன் கலாச்சார தனித்தன்மைகள் உள்ளன. சுவிட்சர்லாந்திலும் சில எழுதப்படாத சட்டங்கள் உள்ளன. அவற்றைக் கடைப்பிடிப்பது முக்கியம்.

## பல்வேறு கலாச்சாரங்கள்

சுவிட்சர்லாந்து வெவ்வேறு பிராந்தியங்கள் மற்றும் நான்கு தேசிய மொழிகள் கொண்ட கலாச்சார ரீதியாக வேறுபட்ட நாடு. மனப்பான்மைகள் பிராந்திய ரீதியாக வேறுபடுகின்றன. பிரெஞ்சு மொழி பேசும் சுவிட்சர்லாந்தின் தனித்தன்மைகள் ஜெர்மன் மொழி பேசும் அல்லது இத்தாலிய மொழி பேசும் சுவிட்சர்லாந்திற்கு பொருந்தாது. நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களுக்கு இடையிலான வேறுபாடுகளும் பெரியவை. இருப்பினும், சுவிட்சர்லாந்து முழுவதிற்கும் ஒற்றுமைகள் உள்ளன:

## வணக்கவுரை

சுவிட்சர்லாந்தில் உள்ளவர் ஒருவரையொருவர் வாழ்த்தும்போது, ஆண்கள் மற்றும் பெண்களிடையே கூட, மக்கள் கைகுலுக்கி, ஒருவரையொருவர் கண்களில் பார்க்கிறார்கள். ஜூரா மாகாணத்தில் வழக்கமான வாழ்த்து முறை "பொன்ஞ்சூர்(Bonjour)", ஆனால் நண்பர்களிடையே நீங்கள் "சல்யூ(Salut)" என்று சொல்லலாம். கிராமப்புறங்களில், ஒருவரையொருவர் அறியாவிட்டாலும், தெருவில் ஒருவரையொருவர் வாழ்த்துவது வழக்கம்.
"மெர்சி" (merci) மற்றும் "த ரியான்" (de rien) ஆகிய வார்த்தைகளை கூறுவதும் முக்கியமானவை. கடைகள் மற்றும் உணவகங்கள் உட்பட.

## நேரம் தவறாமை

நேரம் தவறாமை என்றால் தாமதிக்காமல் இருப்பது.
சுவிட்சர்லாந்தில், மக்கள் பொதுவாக நேரம் தவறாமையை கடைபிடிப்பார்கள்.
நீங்கள் 5 நிமிடங்களுக்கு மேல் தாமதமாக வந்தால், தொலைபேசி அல்லது குறுஞ்செய்தி மூலம் தெரிவிப்பது மரியாதையானது. பணியிடத்தில் நேரம் தவறாமை மிகவும் முக்கியமானது.
கலந்துரையாடல் சந்திப்புகள் ஆகியவற்றிற்கு, முன்கூட்டியே ஒரு திட்டவட்டமான நேரத்தை உறுதி செய்து கொள்வது நல்லது.
நெருக்கமான நண்பர்களுடனும் கூட, முன்னறிவிக்கப்படாத வருகை வழக்கம் அல்ல.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.bonjour-jura.ch/ta/bon-a-savoir/les-regles-et-les-habitudes-en-suisse